THE HINDU
Region

# Ayodhya rites: Jipmer to be closed on Monday forenoon

Jipmer will remain closed till 2.30 p.m. on Monday on account of celebrations of 'Ram Lalla Pran Pratishtha' at Ayodhya, a release said. This was in accordance with the office memorandum issued by the Government of India regarding the celebrations, it said. Emergency services will function without any interruption. All other hospital services will function after 2.30 p.m., it added.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
20.1.2024 (சனிக்கிழமை)

## வெளிப்புற சிகிச்சைக்கு வரவேண்டாம்:

# ஜிப்மருக்கு அரைநாள் விடுமுறை

புதுச்சேரி, ஜன.20-
புதுவை ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, அயோத்தியில் ராமர்கோவில் கும்பாபிஷேக விழா நாளை மறுதினம் (திங்கட்கிழமை) கொண்டாடப்படுவதை முன்னிட்டு ஜிப்மர் நிறுவனம் அன்று மதியம் 2.30 மணிவரை அரை நாள் இயங்காது. இந்த நேரத்தில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனினும் அவசர சிகிச்சை பிரிவுகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும். சிறப்பு கிளினிக்குகள் உள்பட அனைத்து மருத்துவமனை சேவைகளும் பிற்பகல் 2.30 மணிக்கு பிறகு வழக்கம்போல் முழுமையாக செயல்படும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்
புதுச்சேரி
www.dinamalar.com
புதுச்சேரி
• சனி • ஜனவரி 20 2024

# ஜிப்மரில் 22ம் தேதி அரை நாள் விடுமுறை

புதுச்சேரி, ஜன. 20–

ஜிப்மர் மருத்துவமனை வரும் 22ம் தேதி அரை நாள் இயங்காது என, அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேக விழா வரும் 22ம் தேதி நடக்கிறது. இதனை முன்னிட்டு ஜிப்மர் நிறுவனம் 22ம் தேதி மதியம் 2:30 மணி வரை அரை நாள் இயங்காது.

இந்த நேரத்தில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்க வேண்டும். இருப்பினும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும். சிறப்பு கிளினிக்குகள் உள்பட அனைத்து மருத்துவமனை சேவைகள் மதியம் 2:30 மணிக்கு பிறகு வழக்கம்போல் முழுமையாக செயல்படும்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.